## வடலூரில் ரூ.13.71 கோடி மதிப்பீட்டில்

# புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!



கடலூர், நவ.21-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக உயர்கல்வித் துறை சார்பில் கடலூர் மாவட்டம், வடலூர் பார்வதிபுரத்தில் ரூ.13.71 கோடி மதிப்பீட்டில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நேற்று (20.11.2025) திறந்து வைத்ததை தொடர்ந்து, வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் மரு.எம்.கே.விஷ்ணுபிரசாத் ஆகியோர் முன்னிலையில் மாணவர்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப் பேற்றது முதல் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், குறிப்பாக அனைவரும் உயர்கல்வியினை அடையும் நோக்கிலும் பல்வேறு வகையான சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்த சந்தேகங்களை போக்குவதற்காகவும், ஒவ்வொரு மாணவரும் தனக்கென ஒரு உயர்கல்வியினை எவ்வாறு தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட அனைத்து வகையான தகவல்களையும் வழங்கிடும் வகையில் நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்கள் கட்டாயம் உயர்கல்வி அடைய பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலும், அனைவரும் உயர்கல்வியினை அடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

நமது நிருவாகத்தின் சார்பில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக கடந்த ஆண்டில் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கடலூர் மாவட்டமானது மாநில அளவில் அரசுப் பள்ளிகளின் தரவரிசையில் 5ஆவது இடம் பெற்று சிறந்து விளங்குகிறது.

மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி அடைய வேண்டும் என்ற அடிப்படையில் புதிய அரசு கல்வி நிறுவனங்களை பல்வேறு இடங்களில் ஏற்படுத்தி வருவதுடன், ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் குறிஞ்சிப்பாடியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைய வேண்டும் என்று நான் வைத்த கோரிக்கையினை உடனடியாக நிறைவேற்றும் வகையில் 22.06.2022 அன்று முதல் பார்வதிபுரம் பகுதியில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன வளாகத்தில் பல்வேறு பாடபிரிவுகளுடன் மாணவர்களின் நலனுக்காக காணொலி காட்சிவாயிலாக தொடங்கிவைத்தார். கல்லூரிக்கு நிரந்தர கட்டடம் மாணவர்கள் எளிதில் வந்து செல்லும் வகையில் போக்குவரத்து வசதியுள்ள இடத்தில் அமைய வேண்டும் என்ற அடிப்படையில் தற்காலிக கட்டடத்திற்கு அருகே நிலம் ஒதுக்கப்பட்டு இப்புதிய கட்டடம் கட்டப்பட்டு இன்றைய தினம் தொடங்கிவைக்கப்பட்டது. தற்போது இக்கல்லூரியில் பயிலும் 505 மாணவிகள், 272 மாணவர்கள் என மொத்தம் 777 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

பார்வதிபுரத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கல்லூரி தரைதளம் 1597.36 ச.மீ பரப்பளவில் 2 வகுப்பறைகள், முதல்வர் அறை, அலுவலக அறை, 1 மாணவர் பண்டகசாலை அறை, 1 பதிவு அறை, 2 துறை தலைவர்கள் அறை , 1 நூலக அறை, 1 நூலகர் அறை, 1 பொருள் வைப்பறை, 1 ஆய்வக அறை மற்றும் கழிவறை வசதிகளுடனும், முதல் தளம் 1529.00 ச.மீ பரப்பளவில் 6 வகுப்பறைகள், 2 துறை தலைவர்கள் அறை, 1 ஆசிரியர்களுக்கான அறை, 1 கணினி அறை, 1 கருத்தரங்கு அறை, 1 ஆய்வக அறை மற்றும் கழிவறை வசதிகளுடனும், இரண்டாம் தளம் 1529.00 ச.மீ பரப்பளவில் 6 வகுப்பறைகள், 1 உடற்கல்வி இயக்குனர் அறை, 1 ஆசிரியர்களுக்கான அறை, 3 ஆய்வக அறைகள் மற்றும் கழிவறை வசதிகளுடனும் மொத்தம் 5.50 ஏக்கர் பரப்பளவில் ரூ.13.71 கோடி மதிப்பீட்டில் அனைத்து அடிப்படை அம்சங்களுடன் காற்றோட்டமான சூழலில் கட்டப்பட்டுள்ளது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடலூர் நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், துணைத்தலைவர் ரா.சுப்புராயலு, கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குநர் அ.மலர், திட்டங்கள் கோட்டம், தஞ்சாவூர் செயற்பொறியாளர் சிவகுமார், வடலூர் அரசு கலைக் கல்லூரி முதல்வர் ஐ.வண்ணமுத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நவம்பர் 20, 1916

# நீதிக்கட்சி நிறுவப்பட்ட நாள்!


### நீதிக்கட்சியை நிறுவியவர்கள்



பி.டி.ராஜன்



சலபதி ராமகிருஷ்ணா பொப்பிலி ராஜா




ஈ.வி.ராமசாமி



ராம ராய நிங்கர் பனகல் ராஜா



டி.எம்.நாயர்



தியாகராய செட்டியார்

நீதிக்கட்சி நிறுவப்பட்ட நாள் நீதிக்கட்சி (Justice Party) என்று அறியப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) சென்னை மாகாணத்தில் செயல்பட்ட ஒரு அரசியல் கட்சி டாக்டர் டி. எம். நாயர், பனகல் அரசர், பொப்பிலி அரசர், பி. டி. ராஜன், ஈ.வெ. ராமசாமி மற்றும் தியாகராய செட்டி ஆகியோரால் நிறுவப்பட்ட நாள்.

அரசியலிலும் சமுதாயத்திலும் பிராமணர்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்ததை கருதி அதற்கு மாற்றாக பிராமணரல்லாதோருக்காக ஒரு அரசியல் அமைப்பை உருவாக்க நடந்த பல முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருந்தன.

நீதிக் கட்சியின் உருவாக்கம் இத்தேவையை நிறைவேற்றியது.

1944ம் ஆண்டு இக்கட்சி கலைக்கப்பட்டது.

## வடுகப்பட்டி கிராமத்தில் ரூ.4.90 கோடி மதிப்பீட்டில்

# சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லானுக்கு திருவுருவச் சிலை-அரங்கம்!

## பணிகளை அமைச்சர்கள் சு,முத்துசாமி – மு.பெ,சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு!

ஈரோடு, நவ.21-

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரம், வடுகப்பட்டி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களுக்கு ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் முழு திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு வரும் பணியினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் ஆகியோர் இன்று (18.11.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன் ஆகியோர் தெரிவித்ததாவது,

ஆங்கிலேய அரசுக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவர் சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்கள். அதன்படி, அன்னாருக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், அரச்சலூர் ஓடாநிலை தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் சென்னை, கிண்டியில் இருப்பது போல் குதிரையின் மேல் அமர்ந்திருக்கு வெண்கலச் சிலை அமைக்கும் பணியயினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 26.11.2025 அன்று அடிக்கல் நாட்டி துவங்கி வைக்கவுள்ளார்கள். மேலும் தீரன் சின்னமலை அவர்களின் படைத்த படைத்தளபதியாகவும், மெய்க்காப்பாளராகவும் பணியாற்றிய சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக பல போர்களில் போரிட்டு வெற்றி பெற்றவர். ஓடாநிலைக் கோட்டை அருகே உள்ள ஜெயராமபுரத்தில் ஆங்கிலேயர்கள் படையினரால் சுட்டுக் கொள்ளப்பட்டு வீரமரணம் அடைந்தார்.

சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் வீரத்தினை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் அன்னாருக்கு முழுதிருவுருச் சிலையுடன் கூடிய அரங்கமானது மொடக்குறிச்சி வட்டம், வடுகப்பட்டி, ஜெயராமபுரத்தில் ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.11.2025 அன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய சங்கத்தின் தலைவராக அயராது உழைத்து தமிழ்நாட்டில் வெண்மை புரட்சிக்கு வித்திட்டவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பால்வளத்தந்தை ஐயா எஸ்.கே.பரமசிவன் அவர்களுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.12.2024 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் பால்வளத்தந்தை ஐயா எஸ்.கே.பரமசிவன் அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, ஈரோடு மாவட்டம், சூரியம்பாளையம் கிராமம், பால் பண்ணை (ஆவின்) வளாகத்தில் உள்ள பூங்காவில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு இன்றைய தினம் இந்த பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், இணை இயக்குநர் (நினைவகங்கள்) தமிழ்செல்வராஜன், பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மணிவண்ணன், தலைமைப் பொறியாளர் ரங்கநாதன், கண்காணிப்பு பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர் முருகேசன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் இந்து சமய அறங்காவல குழு தலைவராக மாவட்ட துணை செயலாளர் ராசி செந்தில் முருகன் பதவி ஏற்றார். உடன் சரவணக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன், மாவட்ட துணை செயலாளர் திருகண்ணன், மாவட்ட பொருளாளர் சுரேஷ், ஒன்றிய செயலாளர்கள் ரத்தின சபாபதி, கண்ணியம்பட்டி முருகேசன், நகர செயலாளர் புருஷோத்தமன், பேரூர் செயலாளர்கள் செல்வராஜ் திலீப்குமார், செல்வராஜ், முருகன், பொதுக்குழு உறுப்பினர்கள் தெய்வேந்திரன், ரமேஷ், சங்கர், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கோயம்பத்தூர் – மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டத்தை

# ஒன்றிய அரசு நிராகரித்தது அரசியல் வஞ்சகத்தின் உச்சம்!

## ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, நவ. 21-

கோயம்பத்தூர் - மதுரைக்கான மெட்ரோ ரயிலை ஒன்றிய அரசு நிராகரித்தது அரசியல் வஞ்சகத்தின் உச்சம் என்று ‘தீக்கதிர்’ நாளிதழ் தலை யங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ‘தீக்கதிர்’ நாளிதழின் நேற்றைய தலையங்கம் வருமாறு:

கோயம்புத்தூர் மற்றும் மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டங்களை ஒன்றிய அரசு நிராகரித்ததன் மூலம், இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையான சமத்துவத்தை அது காலில் போட்டு மிதித்துள்ளது. இது, பாஜக ஆளும் மாநிலங்களுக்கு ஒரு நீதி; எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு ஒரு நீதி என்ற அப்பட்டமான அரசியல் வஞ்சகத்தை மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது.

மெட்ரோ ரயில் கொள்கை 2017இன் படி, 20 லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரங்களே மெட்ரோ திட்டமிடலைத் தொடங்கலாம். ஆனால், எந்த ஆண்டு மக்கள் தொகைக் கணக் கெடுப்பு என்பதை ஒன்றிய அரசு வேண்டு மென்றே மறைக்கிறது. தமிழகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு, 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி கோவை (15.84 லட்சம்) மற்றும் மதுரை (சுமார் 15 லட்சம்) மக்கள் தொகை 20 லட்சத்திற்குக் குறைவாக இருப்பதாகக் கூறி, அனுமதி மறுத்திருக்கிறது.

அதேசமயம், அதே 2011 கணக்கெடுப்பின்படி இதை விடக் குறைவான மக்கள் தொகை கொண்ட குருகிராம் (9 லட்சம்), புவனேஸ்வ ரம் (8.86 லட்சம்), ஆக்ரா (17.6 லட்சம்), மீரட் (14.2 லட்சம்) போன்ற நகரங்களுக்கு, எதிர்கால வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அவசரமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த பாரபட்சம், தமிழகம் எதிர்காலத்தில் வளர்ச்சியடையக் கூடாது என்ற கெடு நோக்கமன்றி வேறென்ன? இது தமிழகத்தின் வளர்ச்சியைக் குழி தோண்டிப் புதைக்கும் சதி!

சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் தராமல் ஐந்து ஆண்டுகளாக இழுத்தடித்து, தமிழகத்திற்கு ரூ. 9,000 கோடி கூடுதல் நிதிச்சுமையை ஏற்படுத்தியது தற்செயலானது அல்ல. அதே காலகட்டத்தில், நாக்பூர், குர்கான், புனே மெட்ரோ திட்டங்களுக்கு மின்னல் வேகத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

புதிய கல்விக்கொள்கையின் கீழ் இந்தியை கட்டாயமாக்க மறுத்ததற்காக ரூ. 4,000 கோடி நிதி நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், பிஎம் ஸ்ரீ திட்டத்தில் கையெழுத்திட மறுத்ததால் ரூ. 2,200 கோடி மறுக்கப்பட்டிருக்கிறது.

பேரிடர் காலங்களில் பாஜக ஆளும் மாநி லங்களுக்கு உடனடியாக நிவாரண நிதி வழங் கப்படும் போது, தமிழகம், கேரளம் உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள் சேத மதிப்பீ டுகளை சமர்ப்பித்தாலும் உரிய நிதி வழங்கப் படுவதில்லை. அண்மையில், ஏற்பட்ட பேரிடர்களின் போதும் தமிழகம் புறக்கணிக்கப்பட்டதே இதற்குச் சான்று.

திட்ட அனுமதி, நிதிப் பகிர்வு, பேரிடர் நிவாரணம் என அனைத்துத் தளங்களிலும், தமிழகத் தின் வளர்ச்சியைத் தடுப்பதும், அதன் நிதி ஆதாரங்களைச் சுரண்டுவதும் மட்டுமே ஒன்றிய பாஜக அரசின் இலக்காக மாறியிருக்கிறது. கூட் டாட்சிக் கொள்கையின் அடிப்படையான சமத்துவத்தை சிதைக்கும் இந்த அரசியல் வஞ்ச கம் நாட்டின் ஜனநாயகத்திற்கே விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். வளர்ச்சியைத் தடுத்து தமிழ கத்தை முடக்க நினைக்கும் இந்தச் சதியை தமிழக மக்கள் முறியடிப்பார்கள்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் ஈடுபடும் கழகத்தினருக்கு எழும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உதவிடும் வகையில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தலைமைக் கழகம் மூலம் ஒருங்கிணைத்திட கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி., மேற்பார்வையில் அமைக்கப்பட்டுள்ள உதவி மையத்திற்கு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேரில் சென்று, நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து ஆய்வு செய்ததுடன், பல்வேறு மாவட்டத்தில் உள்ள கழக பாக முகவர்களிடம் அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர் பாகத்தில் நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து கேட்டறிந்தார். அதுபோது, சட்டத்துறை இணைச் செயலாளர்கள் சூர்யா வெற்றிகொண்டான், ஜெ.பச்சையப்பன், சட்டத்துறை துணைச் செயலாளர் டாக்டர் ஜி.சந்திரபோஸ், கழக வழக்கறிஞர் பாலாஜி ஆகியோர் உடனிருந்தனர்.